**தலைப்பு – 317- வட மத்திய மாகாண சபை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான தொழிற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

அபிவிருத்தி நன்மைகளை உரித்தாக்கிக்கொண்ட அபிமானமுள்ள மக்களையுடைய மாகாணமொன்றை வழங்கல்.

### 1.2 செயற்பணிகள்

மத்திய அரசாங்கம், மாகாணத்தின் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரை முன்னுரிமையாகக் கொண்ட மாகாணத்திலுள்ள சகல தரப்பினர்களின் பாரிய பங்களிப்புடன் மாகாணத்தில் காணப்படும் வளங்களை சமமான வகையில் பயன்படுத்தி மாகாணத்தின் மனித வள அபிவிருத்தியை முன்னுரிமையாகக் கொண்ட அணுகுமுறை ஊடாக மாகாணத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் நேரடியாகவும் தொடர்ச்சியாகவும் தேசிய அபிவிருத்திக்கு பங்களித்தல்.

### 1.3 பிரதான தொழிற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுதல்

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடுகளும் செலவினமும்**

வட மத்திய மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 16,641,079,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 13,155,307,816 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 3,485,771,184 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 21 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 13,027,879,000 | 10,593,879,000 | 2,434,000,000 | 19 |
| மூலதனம் | 3,613,200,000 | 2,561,428,816 | 1,051,771,184 | 29 |
| மொத்தம் | 16,641,079,000 | 13,155,307,816 | 3,485,771,184 | 21 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.